அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மேயர் பிரியாராஜன் தலைமை!

திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி சார்பில் 'முன்னேற்றப் பாதையில் தி.மு.க.' முப்பெரும் விழா!

தூய்மைப் பணியாளர்களுக்கு - அமைச்சர் கே.என்.நேரு நலஉதவிகள் வழங்குகிறார்!

சென்னை, செப்.27- சென்னை கிழக்கு மாவட்ட திமுக திரு.வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க.முப்பெரும் விழாவை முன்னிட்டு "முப்பெரும் தொடர் - 07" தூய்மை உள்ளம் உயர்வானது! சுய மரியாதை நம் உயிரானது!! எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்டம் நாளை 28/09/25 ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 06.00 மணியளவில், சென்னை, டிகாஸ்டர் ரோடு, டான் பாஸ்கோ பாலி டெக்னிக்கில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் பெருநகர சென்னை மாநராட்சி மேயர் பிரியா ராஜன் வகிக்கிறார. சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, பெரம்பூர் ஆர். ராஜன், புனிதவதி எத்திராசன் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, லயன்.பி.உதயசங்கர் முன்னிலை வகிக்கின்றனர்.

தில்லை கதிரவன், புல்லட் கி.ரமேஷ், பி.புவனவதி, கினார் ஆறுமுகம், எம்.ஏ. டீக்கா, பரிமளா சுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எஸ். புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், மு. சரவணன் எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, தமிழ்ச் செல்வி சசிகுமார் எம்.சி வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில், தூய்மை பணியாளர்களுக்கு மாண்மிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.சி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, என்.கிருஷ்ணமூர்த்தி. மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிசந்திரன், தமிழன் பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், கே. எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, வே.உமாகாந்த், புலவர் சாமிநாகப்பன், ஆர்.வரதன். மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.எம். தேவன், இசட்.ஆசாத் எம்.சி, மண்டலகுழு தலைவர்கள் கூ.பீ.ஜெயின் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர்.சாந்தகுமாரி எம்.சி, பகுதி கழக செயலாளர்கள்: சொ.வேலு எம்.சி, ஐ.சி. எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் எம்.சி, வே.வாசு டி.எஸ். பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ் வி.சுதாகர் எஸ்.முரளி எஸ்.இராஜசேகர் பொதுக்குழு உறுப்பினர்கள்: பி.ஜெ.துளசிங்கம் டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரிவீரராகவன் ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி எம். இப்ராஹிம் கனி அ. நிர்மலாதேவி டாக்டர்.ஏ.பி. பூர்ணிமா இரா.கலைச்செல்வி. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய், எஸ்.தனசேகர், ஜெ. பாலமுருகன் பா.ஜெகதீஷ் க.வினோத் ஜி.ஜெ.பிரபு ஆர். டி.சங்கர்நானா. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் நா.துலுக்காணம் எம். பெரோஸ்கான் கா. ராஜ்முகமது இரா.வீரமணி எல்.பி. எப்.மோகன் துரைகண்ணன் சுதாதீனதயாளன் ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, ஜி.தாமோதரன், பி.விஜயகுமார் எம். விநாயகம் சு.பா.பிரதீப்குமார் ஆர்.எஸ்.சித்திக் ம.அசோக்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி எல். சம்பத்குமார் து.ஆயிரம். திரு.வி.க.நகர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.கோவிந்தன் பி.சுகுமார் த.கருணாநிதி வனஜா சண்முகம் அ.கருணாநிதி. திரு.வி.க.நகர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் தே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ் எம்.தமீம் வி.க.வெங்கடேசன் எஸ்.சசிகுமார் எஸ்.வெங்கடேசன் பா.பி.தாஸ். திரு.வி.க.நகர் வடக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வி. விவேகானந்தன் ந.தமிழ்மணி ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி எம். ஜெயபால் சி.எம்.மணிகண்டன் ஆர்.கிருஷ்ண வேணி எச்.ஜியாவுதீன் எம்.அருண்குமார் எஸ்.வசந்தா வி. செந்தில்குமார் ஜி.ராஜ்குமார், அ. சத்யா எஸ்.ஜெயகுமார் கே.ஹரிபிரசாத் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நலத்திட்ட விழாவில் வட்ட கழக செயலாளர் எம். இசட்.அபோய் நன்றி கூறுகிறார்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் ஊத்துக்காடு ஊராட்சியில் அங்கன்வாடி மையத்தை மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ திறந்து வைத்தார் உடன் ஒன்றிய குழு தலைவர் ஆர் கே தேவேந்திரன் ஒன்றிய குழு துணைத் தலைவர் பி. சேகர் ஒன்றிய குழு உறுப்பினர் டி. சுஞ்சய் காந்தி ஊராட்சி மன்ற தலைவர். திருமதி. சாவித்திரி மணிகண்டன். உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் - கும்முடிப்பூண்டி தொகுதி கிளை கழக வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆய்வுக் கூட்டம்!

மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கிளை மற்றும் வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆய்வு கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது

தேதி	ஒன்றிய, பேரூர்	நேரம்	ஏற்பாடு
29.09.2025	பூண்டி வடக்கு ஒன்றியம்	மாலை 2 மணிக்கு	ஜான் (எ) பொன்னுசாமி, ஒன்றிய கழக செயலாளர்
	பூண்டி கிழக்கு ஒன்றியம்	மாலை 4 மணிக்கு	டி.கே.சந்திர சேகர், ஒன்றிய கழக செயலாளர்
	ஊத்துக்கோட்டை பேரூர்	மாலை 6 மணிக்கு	அபிராமி குமரவேல், பேரூர், ஒன்றிய கழக செயலாளர்
30.09.2025	எல்லாபுரம் தெற்கு ஒன்றியம்	மாலை 2 மணிக்கு	ஆ.சத்தியவேலு, ஒன்றிய கழக செயலாளர்
	எல்லாபுரம் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணிக்கு	ஜெ.மூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர்
08.10.2025	கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம்	மாலை 5 மணிக்கு	கி.வே.ஆனந்த குமார், ஒன்றிய கழக செயலாளர்
09.10.2025	கும்முடிப்பூண்டி பேரூர்	காலை 10 மணிக்கு	இரா. அறிவழகன், பேரூர் ஒன்றிய கழக செயலாளர்
	கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம்	பிற்பகல் 12 மணிக்கு மணிக்கு	நா.பரிமளம், ஒன்றிய கழக செயலாளர்
11.10.2025	கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம்	மாலை 5 மணிக்கு	மு.மனிபாலன், ஒன்றிய கழக செயலாளர்

மேற்கண்ட நிகழ்ச்சிகளில்: தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், இ.ஏ.பி.சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி, மாவட்ட கழக நிர்வாகிகள்: மு.பகலவன், மு.கதிரவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கும்முடிப்பூண்டி தொகுதி பார்வையாளர்: வீ. கவி கணேசன் மாநில நிர்வாகிகள்: சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், கே.சுரேஷ், ராபர்ட்ராஜதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, ஏ.வி.இராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் கலந்து கொள்கிறார்கள் அது சமயம் கிளை கழக, வார்டு கழக நிர்வாகிகள், BLA2, BDA, இன்னாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ்

பொறுப்பாளர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக

திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - பயனாளிகளுக்கு ஆவணங்களை வழங்கினார்!

சென்னை, செப். 27- மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்

கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று திரு வி கே நகர் சட்டமன்றத் தொகுதியில் மண்டலம் 6 வார்டு 75 சென்னை, நம்மாழ்வார் பேட்டையில் உள்ள அரசு பாலிடெக்னிக்கல் நேற்று (26/9/2025) வெள்ளிக்கிழமை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக

மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்.5 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 202 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 57 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி 16 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 2 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை 14 மற்றும் பெயர் மாற்றுதல் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 125 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தை களுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் 1 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை 4 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை 317 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் 216

என மொத்தமாக 1245 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1243 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்

இந்நிகழ்ச்சியில்இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ப. தாயகம் கவி மண்டலகுழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், பகுதி கழகச் செயலாளர் எம்.சாமிக்கண்ணு, மாமன்ற உறுப்பினர் எல். ரமணி மண்டல அலுவலர் சரவணன், வட்ட கழகச் செயலாளர் பா.பி. தாஸ்,வி.க.வெங்கடேசன் மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 5

ம.அ.5.ந.க.எண். இ2/618/2025 **குறுகிய கால ஒப்பம்**

குறுகிய கால மறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரப்படுகிறது.

புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி ஜீல்ஸ் சாலை, ஆசிர்வாதபுரம் வ.உ.சி சாலை மற்றம் மாநகர சென்னை நடுநிலைப்பள்ளி போர்துகீஸ் தெருவில் வார்டு எண்கள். 56,55 மற்றும் 57ல் கட்டும் பணிக்கு

பணியின் மதிப்பு குறைந்த பட்சம் 61.62 இலட் சங்கள் முதல் அதிகபட்சம் 1.63 கோடி வரை	முன்வைப்புத் தொகை மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்த புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம்: **06.10.2025 03.00** மணி வரை
ஒப்பந்த புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **07.10.2025 03.30** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/5404/ஒப்பந்தப்புள்ளி/2025 **உதவி ஆணையர் ம. 5**

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்-2 21வது வார்டு பகுதி வாழ் மக்கள் பயன்படுகின்ற வகையில் வீட்டு வரி, குடிநீர் வரி, இ சேவை மையம், மாநகராட்சி அதிகாரி அறை, மாமன்ற உறுப்பினர் அறை என அனைத்து சேவைகளும் வார்டுக்குள் கிடைக்கக்கூடிய வகையில் ரூ. 88.00 லட்சம் மதிப்பீட்டில் AGS நகர் பார்க் அருகில் தாம்பரம் மாநகராட்சி வார்டு அலுவலகம் கட்டிடம் கட்டும் பணியை மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார் அப்பொழுது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் கலைச்செல்வி வெங்கடேசன் மாநகராட்சி அதிகாரிகள்,வட்டக் கழகச் செயலாளர் பி. வெங்கடேசன் நலச்சங்க நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

உங்களுடன் ஸ்டாலின் தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கும் அரசின் சேவைகள் சென்று சேர்ந்திட வேண்டும் என்ற குறிக்கோளுடன், மக்களின் குறைகளை மக்களைத் தேடி வந்து தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் முன்னெடுப்பின் கீழ், உங்களுடன்_ஸ்டாலின் திட்ட முகாம், நேற்று (26.09.2025) இராயபுரம் சட்டமன்ற தொகுதி 48-வது வார்டு, பாண்டியன் திரையரங்கம் அருகில் சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐ.ட்ரீம் இரா. மூர்த்தி கலந்துகொண்டு, அனைத்து துறைகளிலும் பொதுமக்களின் மனுக்கள் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, தீர்வு காணப்பட்ட மனுக்களை உடனடியாக பொதுமக்களுக்கு வழங்கினேன். மேலும் மீதமுள்ள மனுக்கள் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்று அரசு அதிகாரிகளிடம் தெரிவித்தார். இந்நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், வட்டச் செயலாளர் ரவி, மாமன்ற உறுப்பினர் திருமதி. விஜய லெட்சுமி, விஜயகுமார் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

திருக்குறள் திருப்பணித் திட்டம்!

இரண்டாம் பயிலரங்கம்!

சென்னை, செப். 27- முதலமைச்சர் அவர்களால் 31.12.2024 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சியில் தமிழ் நாடு முழுவதும் 'திருக்குறள் திருப்பணிகள்' திட்டம் செயற்படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இவ்வறிவிப்பிற்கிணங்க சென்னை மாவட்டத்தில் திருக்குறள் திருப்பணி திட்டம் இரண்டாம் பயிலரங்கு 26.09.2025 (வெள்ளிக் கிழமை) முற்பகல் 10.30 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் நடத்தப்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர். ந. அருள் வரவேற்புரை ஆற்றினார். சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் (பொது) திருமதி ஜெ. ஹஸ்ரத் பேகம் அவர்கள் தலைமையுரையும் திருவள்ளுவர் விருதாளர் முனைவர் ந. முருகன் (சேயோன்), உலகத் திருக்குறள் பேரவை தலைவர் முனைவர் கஸ்தூரி ராஜா ஆகியோர் வாழ்த்துரையும் வழங்கினர். உலகத் திருக்குறள் பேரவை செயலாளர் முனைவர் கலை. செழியன் அவர்கள் வாழ்வியல் வளம் சேர்க்கும் வள்ளுவம் எனும் தலைப்பில் கவனகச் செயல் விளக்கம் அளித்தார். மேலும் அவர் திருக்குறள் பயிற்றுநர்களாகிய பேராசிரியர் முனைவர் இரா. ஆரோக்கியமேரி, கோ. பழனி, மதியழகன், திருக்குறள் தாமோதரன், முத்துபாண்டி ஆகியோருக்கு நுண்பயிற்சி அளித்தார். நிறைவாக பயிற்சிக்குப் பிறகு தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் திருமதி. வே. சாந்தி நன்றியுரையாற்றினார்.

கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் கீழச்சேரி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு வளர்ச்சி நிதியிலிருந்து ரூபாய் 11.50 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடத்தை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு பொருட்கள் வழங்கும் பணியையும் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு துறை துணைப்பதிவாளர் கோ. பாலாஜி , சி. எஸ். ஆர். சுகன்யா, கழக ஒன்றிய செயலாளர் மோ. ரமேஷ், மாவட்ட அணி நிர்வாகிகள் வி. எஸ். நேதாஜி, மருத்துவர் தினேஷ், ஜெயவேல், ஒன்றிய நிர்வாகிகள் ஆர். கோபால், தேவஆரோக்கியம், பிஞ்சிவாக்கம் ரவி, ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் கே. பி. எஸ். கார்த்திக், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் தேவி கலா ஆரோக்கியம், சதாசிவம், கண்ணூர் ராஜா, மப்பேடு ராஜேந்திரன், நீலாவதி ராஜேந்திரன், மப்பேடு சண்முகம், இருதயா, பிஞ்சிவாக்கம் உதயா, சரண்ராஜ், தினேஷ், கிளைக் கழக செயலாளர்கள் தங்கராஜ், தேவராஜ், கூட்டுறவு சங்க செயலாளர் முனிவேல் விற்பனையாளர் செண்பகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் அகரம்தென் ஊராட்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ.,சத்தியா நகர் ஏரி அருகில் வசிக்கும் 70 பட்டியல் பழங்குடியினர் (ST) குடும்பத்தினருக்கு, குறுஞ்சி நகர், விக்டோரியா பண்ணை இல்லம் அருகில் வழங்கவுள்ள மாற்று இடத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மேலும் பூங்கா, அங்கன்வாடி, கழிவறை, குடிநீர் போன்ற வசதிகளை அங்கு ஏற்படுத்த ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில். அகரம்தென் ஊராட்சி மன்ற தலைவர் சி.கே.ஜெகதீஸ்வரன்,துணை தலைவர் அரவிந்த் மனோகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.